**செய்தி வெளியீடு எண் : 1768** **நாள் : 10.10.2022**

**உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. முலாயம் சிங் அவர்கள் மறைவை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு.**

உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதல்வரும் சமாஜ்வாடி கட்சியின் மூத்த தலைவருமான திரு. முலாயம் சிங் அவர்கள் மறைந்தார் என்பதையறிந்து வருந்தினேன்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டிற்காக இந்திய அரசியலில் போராடிய மிக உயர்ந்த தலைவர்களுள் ஒருவரான திரு. முலாயம் சிங், மதச்சார்பற்ற கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது மரணம் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும்.

அன்புச் சகோதரர் திரு. அகிலேஷ் யாதவ் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும், சமாஜ்வாடி கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க.வின் சார்பில் கட்சியின் பொருளாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவருமான திரு.டி.ஆர்.பாலு அவர்கள் திரு. முலாயம் சிங் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவார்.

Saddened by the demise of former CM of UP and senior leader of Samajwadi Party Thiru. Mulayam Singh.

One of the tallest figures in Indian Politics who stood for reservation for the OBC, Thiru Mulayam Singh was deeply committed to secular ideals. His death is an irreparable loss.

I convey my heartfelt condolences to my brother Akhilesh Yadav & his grieving family, and the cadre of Samajwadi Party.

On behalf of DMK, Party Treasurer and DMK Parliamentary Party leader Thiru T.R. Baalu will pay last respects to Thiru. Mulayam Singh avl.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in